**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு**
**சென்னை - திருவான்மியூர் ஸ்தல புராணம்**

---

எல்லா ஊரில் ஊருக்கு நடுவிலோ வேறு பக்கத்திலோ கோயில்கள் இருக்கும். பொதுவாகத் தமிழகத்தின் ஒவ்வொரு பெரிய ஊர்களின் நடுவிலும் கோயில் இருக்கும். ஆனால் சென்னை மாநகரின் முதல்-இடை-கடைப் பகுதிகள் ஆகிய மூன்று பக்கங்களிலும் மிக உன்னதமான சிவ ஷேத்ரங்கள் விளங்கும் காரணத்தால் அதிகப் பெருமை ஏற்படுகின்றது.

**அவை:**
வடக்கே - திருவொற்றியூர் [ஸ்ரீவடிவுடை அம்பாள் சமேத த்யாகராஜ ஸ்வாமி]

மத்தியில் - திருமயிலை [ஸ்ரீகற்பகாம்பாள் சமேத கபாலீஸ்வரர்]

தெற்கே - திருவான்மியூர் [ஸ்ரீத்ரிபுரசுந்தரி சமேத மருந்தீஸ்வரர்]

நாம் இதில் மூன்றாவது ஸ்தலத்தைப் பார்க்கலாமா? வாருங்கள் சென்னையில் இருந்து மஹாபலிபுரம் செல்லும் அழகிய ஈசிஆர் ECR ROAD [ஈஸ்ட் கோஸ்ட் ரோட்- EAST COAST ROAD] சாலையில் போகலாம்.

பத்து பதினைந்து வருஷங்களுக்கு முன் வரை திருவான்மியூர் ஒரு கிராமம் தான். சென்னையின் மஹா அவுட்டர் ஏரியா தான். கடற்கரை, மீனவர் குப்பங்கள், வாழைத் தோட்டம், நெல் வயல்கள் என அழகாக இருந்த இடம் தான் இன்று சென்னையின் மிக முக்கிய செல்வ செழிப்பான ”பார்ஷ்ட்” பகுதியில் ஒன்றாகியும் விட்டது.

திருவான்மியூர் சிறிய ஊர் தான், ஆனால் அதனுள் மிக ப்ரம்மாண்டமான பல ஆன்மீக விஷயங்கள் இருப்பதையும் பார்க்கலாம்.

பஸ் டிப்போவை விட்டு ஈசிஆர் ரோட்டில் சென்றால் அழகிய ஐந்து நிலை ராஜ கோபுரம் நம்மை வரவேற்கிறது. அதில் ”மருந்தீஸ்வரம்” என்ற அழகிய நியான் விளக்கு இரவில் ஒளிவீசும்.

கோபுர வாசலுக்கு எதிரே நட்டநடு சாலையில் இவ்வூரில் இறைவன் கோயில் கொள்வதற்குக் காரணமான ஸ்ரீவால்மீகி மஹரிஷி கோயில் கொண்டிருக்கிறார்.

**மஹறிஷியின் தேடல்:**

சற்று மனதில் கற்பனையை உண்டாக்கிப் பல ஆயிர வருஷங்களுக்கு முன் செல்வோமா?

ஸ்ரீராமனின் வரலாற்றை அழகிய சம்ஸ்க்ருதத்தில் "ராமாயணம்" ஆக மஹறிஷி வால்மீகி எழுதி உலக மக்களுக்கு அளித்த பின் அவருக்கு மேன்மேலும் ஆன்மீக ஞானம் வேண்டும் என மனம் எண்ணியது. அதே வேளையில் தன் வேலை முடிந்த கையோடு ஒரு பெரிய ஷேத்ராடனம் செய்ய வேண்டும், குறிப்பாக தென் பாரத ஸ்தலங்களுக்குச் செல்ல வேண்டும் என்று அவர் மனதில் ஒரு சங்கல்பம் வைத்தார், இறைவனைப் ப்ரார்த்தித்தார்.

தனக்கு இன்னும் அதீத விழிப்புணர்வுடன் கூடிய பரிபூர்ண மெய்யுணர்வு நிலை ஏற்பட வேண்டும் என விரும்பி தென் திசை நோக்கி வருகிறார். பல ஸ்தலங்களையும் கோயில்களையும் சேவித்து வணங்கியபடியே வருகிறார்.

அப்போது கடற்கரை அருகில் ஒரு கோயிலில் தானாகத் தோன்றிய அழகிய வெண்மையான சிவ லிங்கத்தை அப்பகுதி மக்கள் வழிபடுவதை அறிந்து அவரும் சிவனை தரிசித்தார். அந்த லிங்கத்தின் அழகும் அதைப் பற்றி மக்கள் கூறிய செய்திகளும் அவரை அவ்விடத்திலேயே ஓர் ஆஸ்ரமத்தை உருவாக்கித் தங்க வைத்து விட்டது.

**காமதேனு வணங்கிய சிவலிங்கம்:**

எதைக் கேட்டாலும் வாரி வழங்கும் தெய்வப் பசு காமதேனு இந்த சிவலிங்கம் இருக்கும் இடத்தில் மேய்ந்ததாம். லிங்கம் என்று தெரியாமல் அதன் கால் பட்டு லிங்கத்தில் ரத்தம் வந்ததாம். அதை உணர்ந்த அப்பசு முறையே லிங்கத்தைப் பால் சுரந்து, அபிஷேகித்துப் பூஜித்ததாம். இதனால் லிங்கம் வெண்மை நிறமாகவும் மாறிப் பால் கரை படிந்துவிட்டது. இதைக் கண்ட காமதேனு சிவனைப் "பால் வண்ண நாதா சரணம்!" என்று அழைத்தே பூஜித்ததாம்.

இன்றும் இந்த ஸ்வம்பு லிங்கத்தின் மேல் வெண்மையான பாலின் கரையையும், பசுவின் கால் பட்டு சற்று உடைந்த பகுதியையும் காணலாம். அதிகம் பாலால் தான் அபிஷேகம் செய்கிறார்கள்.

**கேட்டதை எல்லாம் வாரி வழங்கும் பசுவாகிய காமதேனு யார்?**

நம் மனம் தான் அது! மனம் தன் ஜீவாதார சக்தியை முறையே சுயநலம் இன்றி எதை விரும்பினாலும் அது இறை அருளால் கிடைக்கும். ஆனால் இங்கு ஏன் இந்தப் பசு சிவனை வணங்க வேண்டும்? நாம் பூரண விழிப்புணர்வில் இருந்து

கொண்டு, நாம் வேண்டுவதோ விரும்புவதோ அவசியம் நமக்குத் தேவை தானா என்று ஒரு முறைக்குப் பல முறை சிந்திக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்பட சிவனை வணங்குகிறது என்று தெரிய வேண்டும். மேலும் விரும்பியவற்றை எல்லாம் அடையும் போது நம் ஜீவாதார சக்தி எப்படி செலவாகிறது என்ற உண்மையையும் மனம் புரிந்து கொள்ள வேண்டும். சிவனைப் பூஜித்துக் காமதேனுவாகிய மனம் பெற்ற வரம் இந்த விழிப்புணர்வே!

**ஸ்ரீராமன் பூஜித்த சிவன்:**

இந்த விழிப்புணர்வு வேண்டித் தானே வால்மீகியும் பல பயிற்சிகள் செய்து வருகிறார். அவ்வூரிலேயே தங்கி அவர் முறையே த்யானம், தவம், பூஜை, வ்ரதம், உத்சவம், யோகம் என அனைத்து வழிகளிலும் சிவனை பூஜித்து மக்களுக்கு உரிய காலத்தில் உரிய சேவைகள் பலவும் செய்து வரும் போது, ஸ்ரீராமனும் அவரை இவ்வூரில் கண்டு வணங்கினான். அவன் தான் வந்த அடையாளமாக ஸ்ரீராமநாத லிங்கம் ஒன்றை ப்ரதிஷ்ட்டை செய்து விட்டு அயோத்யா திரும்பினான்.

வால்மீகி வாழ்ந்து வழிபட்டதால் இவ்வூர் வால்மீகி ஊர் என்று ஆகிப் பின்னர் திருவான்மியூர் என மாறியது.

**மருந்தீஸ்வரர்:**

மக்கள் பலர் இவரிடம் உடல் ஆரோக்யத்துக்கும் மருந்து கேட்பது வழக்கம். அவரும் பல ஆயுர்வேத சித்த மருந்துகளைத் தருவார். அப்போது அவர் சொல்வாராம்," மக்களே! இந்த உடலுக்கு ஏற்பட்ட வ்யாதிக்குக் காரணம் நீங்கள் உங்கள் ஜீவாதார சக்தியை வீணாக்கி விட்டது தான். இந்த மருந்து வெறும் மூலிகைகள் தான். இந்த மருந்து உங்கள் உடம்புக்குள் வேலை செய்து வ்யாதி தீர அதற்கே ஒரு விழிப்புணர்வு தேவை. அந்த விழிப்புணர்வு இதோ இந்த சிவன் தான். எனவே பக்தியுடனும் மிக்க விழிப்புணர்வுடனும் சிவனை வழிபட்டு மருந்தை உண்ணுங்கள். மருந்துக்கே மருத்துவ குணத்தை இவர் தருவதால் இவர் மருந்தீஸ்வரர்! " என்று கூறுகிறார்.

இந்த மனிதப் பிறவி என்ற தீராத வ்யாதிக்கு மருந்து, விழிப்புணர்வாகிய இவரே! ஆசை என்ற காரணத்தால் தானே மீண்டும் மீண்டும் பிறவிகளை எடுத்துக் கொண்டே இருக்கிறோம்? அந்த ஆசை என்ற கிருமி நம் மனதுக்குள் நுழையாமல் தடுக்கும் நோய் எதிர்ப்பு சக்தி எது? விழிப்புணர்வாகிய இந்த சிவன் தான்!

நம்முடைய ஆத்மா இறைவனின் சொத்து. அதை மறந்து அது நம்முடையது என்று பைத்தியம் போல வாழ்கிறோம், இறைவனிடம் முழுமையாகத் தர மறுக்கிறோம். அந்த மனதின் மறத்திக்கு போராட்ட குணத்துக்கும் அருமருந்து எது? இதோ இவர் தான்!

**தாயே! த்ரிபுரசுந்தரி!**
இந்தக் கோயிலில் உள்ள பார்வதி "த்ரிபுரசுந்தரி" [மூன்று உலகிலுன் மிக்க அழகு கொண்டவள்] என்ற பெயருடன் மிக அழகாக இருக்கிறாள். தமிழில் இந்த அன்னைக்கு "சொக்கநாயகி" என்றே பெயர். மனம் கட்டுக்கு அடங்காமல் திரியும் போது அந்த மனமாகிய யானையை அடக்கும் ஞானமாகிய அங்குசமும், மனதை அமைதியாக ஒருநிலைப் படுத்தும் ஆக்கபூர்வமான செயல்களான பாசத்தையும் மேல் இரண்டு கைகளில் தாங்கி இருக்கிறாள். அபயம்-வரதம் காட்டி அருள்கிறாள். அன்னையின் கழுத்தில் அவளது பூரண சக்தியை அருளும் ஸ்ரீசக்ர மஹாஎந்த்ரம் ஹாரமாக அழகுடன் தொங்குகிறது.

மடிசார்க்கட்டுப் புடவை இந்த அன்னைக்கு மிக அழகாக இருக்கும். மேலும் பூக்களைக் கொண்டே பாவாடையும் அணிவிக்கிறார்கள்.

**உப த்யாகராஜ ஸ்தலம்:**
[திருவாரூர்த் த்யாஜராஜர் வரலாற்றை சற்று மாணவர்களுக்கு ஞாபகம் செய்க.] பல்லவ மன்னர்களின் வேண்டுதலுக்கு ஏற்ப இறைவன் இவ்வூரில் மஹரிஷியின் பரிந்துரைப் படி பங்குனி மாதம் பௌர்ணமியில் பதினெட்டு வகை பரதநாட்டிய ஆடல்களைக் காட்டியருளிக் கடைசியில் தன் அழகிய விக்ரஹத்தையும் தந்தருளினார். அதுவே த்யாகராஜ விக்ரஹம். தனியே த்யாகராஜ மண்டபத்துள் அவர் அமர்ந்தருள்கிறார். திருவான்மியூர் உப த்யாகராஜ ஸ்தல எனப் போற்றப்படுகின்றது. ஒவ்வொரு பௌர்ணமிக்கும் இவர் ஊரை வலம் வருவார், வால்மீகி கோயில் வாசலில் ஆடுவார்.

**திருவான்மியூரைப் பாடியவர்கள்:**
வால்மீகி பல ஸ்தோத்ரங்களை செய்திருக்கிறார், ஆனால் அவை இன்று கிடைக்கவில்லை. அப்பரும் சம்பந்தரும் அருணகிரிநாதரும் பாம்பன் ஸ்வாமியும் இவ்வூர் இறைவனைப் பாடி இருக்கின்றனர்.

**ஜீவசமாதிகள்:**
சித்தர்களோ, யோகிகளோ, மஹான்களோ இறந்த பின் அவர்தம் உடலை சமாதியுள் வைத்து வழிபடுவது எல்லா மதங்களிலும் உள்ள ஒரு வழக்கம்.

குறிப்பாக சித்தர்கள் [மனதை இறைவனிடம் பக்தியால் வைத்துப் பல சக்திகளைப் பெற்று அதன் மூலம் மக்களுக்குப் பல சேவைகள் செய்பவர்கள்] சமாதி கொண்ட ஸ்தலம் மிகவும் சக்தி வாய்ந்தது. அவ்வூரில் விழிப்புணர்வும் அதிக அளவில் மக்களுக்கு ஏற்பட வாய்ப்புகள் அதிகம். திருவான்மியூரில் பாம்பன் சித்தர் மற்றும் ஸ்ரீசர்க்கரை அம்மாள் ஆகிய பெண் சித்தர் ஆகியோரின் ஜீவசமாதிகள் இருக்கின்றன. எனவே இவ்வூர் மிகவும் சக்தி கொண்டதாக கல்வி, கலை, தொழில், வளம் ஆகியவற்றில் புகழ் பெற்று விளங்குகிறது.

**தேவாரம்**:
விண்ட மாமலர் கொண்டு விரைந்து நீர்
அண்டர் நாயகர் தன்னடி ஏத்துமின்!
பண்டு நீர் செய்த பாவம் மறைந்திடும்,
வண்டு சேர் பொழில் வான்மியூர் ஈசனே! [சம்பந்தர்]

நமசிவாய!